CIKS

# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஜனவரி 2011 மலர் 6 இதழ் 4

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



அனைவருக்கும் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்!

## சமுதாயக் காய்கறித் தோட்டம்

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள ஆதமங்கலம் கிராமத்தில் சமுதாயக் காய்கறித் தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பாரம்பரியக் காய்கறி ரகங்களைப் பாதுகாத்தல் மற்றும் குழுவாகச் செயல்படுவதை ஊக்கப்படுத்துதல் போன்றவை இந்த முயற்சியின் முக்கிய நோக்கங்கள் ஆகும். பத்து சென்ட் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் காய்கறித் தோட்டம் பொன்னி பெண்கள் சுய உதவிக் குழுவினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு தேவையான, பயிற்சிகள் மற்றும் தோட்டத்தைப் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்குதல் போன்ற தொழில்நுட்ப உதவிகளும், பல்வேறு பாரம்பரியக் காய்கறி ரகங்களின் தரமான விதைகளும் நமது மையத்தினால் வழங்கப்பட்டன. களையெடுத்தல், தண்ணீர் பாய்ச்சுதல், தாவரக் கரைசல்கள் மற்றும் மக்கு உரத்தைத் தயாரித்து உபயோகித்தல், அறுவடை போன்ற அனைத்து செயல்பாடுகளையும் குழு உறுப்பினர்களே மேற்கொண்டு வருகின்றனர். இந்தச் சமுதாயக் காய்கறித் தோட்டம் சுற்று வட்டாரங்களில் உள்ள கிராமங்களுக்கு ஒரு மாதிரி தோட்டமாகவும் விளங்குகிறது. இதைப் பார்வையிட்டு சென்ற அநேக பெண்கள் தங்கள் வீடுகளில் காய்கறித் தோட்டங்களை உருவாக்கி பராமரித்து வருகின்றனர். இதன் மூலம் பல பாரம்பரியக் காய்கறி ரகங்கள் பாதுகாக்கப்பட்டும் அவற்றின் விதைகள் சேமிக்கப்பட்டும் வருகின்றன.



*சமுதாயக் காய்கறித் தோட்டத்தில் பொன்னி பெண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள்*

## இயக்குனருக்கு அளிக்கப்பட்ட கௌரவப் பட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் இயக்குனர் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு திண்டுக்கல்லில் உள்ள காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டத்தை (Honoris Causa) அக்டோபர் 28ஆம் தேதியன்று வழங்கியது. பாரம்பரிய அறிவை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளுக்காக இந்தப் பட்டம் வழங்கப்பட்டது. இந்தக் கௌரவ டாக்டர் பட்டத்தை காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் 28வது பட்டமளிப்பு விழாவில் துணை ஜனாதிபதி திரு. அமீத் அன்சாரி அவர்கள் வழங்கினார்.





# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**பல்வகைமைப் பாதுகாப்பு பூச்சிக்கொல்லிகளின் அளவைக் குறைத்தல் மற்றும் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு - ஒரு தற்சார்பு முக்கோணம்**

இந்தத் திட்டம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் (UNDP-GEF) உதவியுடன் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நவம்பர் 2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பெண்கள் சுய உதவிக் குழுவினர் அரிசி அப்பளம் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக இவர்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழுள்ள இரண்டு பெண் விவசாயிகள் திருவாரூர் மாவட்ட வேளாண்துறை அதிகாரிகளுக்கு நடத்தப்பட்ட இரண்டு நாள் பாலினச் சமன் குறித்த பயிற்சியில் பயிற்சியாளர்களாகக் கலந்து கொண்டனர். இதில், இயற்கை விவசாயம், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்பு மற்றும் சமுதாய மண்புழு உரத் தயாரிப்பு குறித்த தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துக் கொண்டனர். திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள எட்டு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு "ரசாயனப் பூச்சிக்கொல்லிகளின் அளவைக் குறைத்தல்" என்ற தலைப்பில் ஆறு பயிற்சிகள் நடத்தப்பட்டன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 12 கிராமங்களைச் சேர்ந்த 57 விவசாயிகள் பாரம்பரிய நெல் ரகங்களைப் பயிரிட்டு பாதுகாத்து வருகின்றனர்.

**இயற்கைவழி வேளாண்மை மூலம் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்**

இந்தத் திட்டம் மும்பையிலுள்ள ஜாம்செட்ஜி டாடா டிரஸ்டின் (JTT) உதவியுடன் காஞ்சிபுரம், ராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மே 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள 38 விவசாயிகள் சங்கங்களின் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. நெல் ரகங்கள், நிலக்கடலை, உளுந்து, எள் மற்றும் காய்கறிகளில் சான்று மற்றும் உண்மை நிலை விதை உற்பத்தி 180.81 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடுபொருள் உதவி மற்றும் பயிர்க்கடன் திட்டங்களின் கீழ் 777.85 ஏக்கர் தேர்வு செய்யப்பட்டு இடுபொருட்களும் பயிர்க் கடனும் வழங்கப்பட்டுள்ளன. இதை பயன்படுத்தி விவசாயிகள், நெல் ரகங்கள், தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், வாழை, பருத்தி, தென்னை, கரும்பு மற்றும் மலர் வகைகளைச் சாகுபடி செய்து வருகின்றனர். நான்கு மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ள மாதிரி விளக்க வயல்களில் இயற்கைவழி வேளாண்மை மற்றும் அதை சார்ந்த தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 83 மாதிரி காய்கறித் தோட்டங்கள் மற்றும் இரண்டு சமுதாயக் காய்கறித் தோட்டங்களில் பல்வேறு காய்கறி ரகங்கள் இயற்கைவழியில் பயிரிடப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள சமுதாய மண்புழு உரக் கூடங்களில் மண்புழு உரத் தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மண்புழு உரத் தயாரிப்பு போன்ற 17 சிறுதொழில்கள் துவங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர்களுக்கு, 38 குறுகிய காலப் பயிற்சிகளும், 8 பயிற்சியாளர் பயிலரங்குகளும் நடத்தப்பட்டன. மேலும், ஐந்து கல்விச் சுற்றுலாக்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. மதுரையில் நடைபெற்ற "*அக்ரி எக்ஸ்போ 2010*" என்ற தலைப்பிலான வேளாண் கண்காட்சியில் கலந்து கொண்டோம். இந்தத் திட்டத்தின் கீழுள்ள விவசாயிகளின் வயல்களில் ஐ.எம்.ஓ. (IMO) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. நவீன் பட்டா அவர்கள் புற ஆய்வை மேற்கொண்டார்.

**தற்சார்பு வேளாண்மையை வலுப்படுத்துவதன் மூலம் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் - மானாவாரி சாகுபடிக்கான திட்டம்**

இந்தத் திட்டம் ஃபோர்டு மற்றும் ஹீவாஸ் நிறுவனங்களின் உதவியுடன் திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் பணிகள் திருவண்ணாமலையிலுள்ள ஜவ்வாது மலை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள செந்துறைப் பகுதியிலுள்ள 15 கிராமங்களில் 1350.81 ஏக்கரில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பேய் எள், கொள்ளு, மக்காச் சோளம், நிலக்கடலை, சாமை, உளுந்து போன்ற பயிர் ரகங்கள் 1106 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. திட்டத்தின் கீழுள்ள விவசாயிகளின் வயல்களில் அக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு மாவட்டங்களிலும் 45 பயனீட்டாளர்கள் இயற்கைவழி வீட்டுக் காய்கறித் தோட்டங்களைப் பராமரித்து வருகின்றனர். பயனீட்டாளர்கள் மண்புழு உரத் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளனர். திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள், நீர் மேலாண்மைத் தொழில் நுட்பங்கள் மற்றும் சட்ட விழிப்புணர்வு குறித்து நான்கு பயிற்சிகள் நடத்தப்பட்டன. திண்டுக்கல் மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு இரண்டு கல்விச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதில் இயற்கைவழி பண்ணைகள் மற்றும் மண்புழு உரத் தயாரிப்புக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஜவ்வாது மலையில் சிறுதானியங்களைப் பக்குவப்படுத்துவதற்கான இயந்திரம் பொருத்துவதற்காக நிலம் தேர்வு செய்யப் பட்டுள்ளது.

**ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்தும் திட்டம்**

நமது மையம் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்தும் திட்டத்தை ஜனவரி 2009 முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர்கள் 22.52 ஏக்கரில் இயற்கைவழி நெல் சாகுபடியை மேற்கொண்டு வருகின்றனர். பயனீட்டாளர்களுக்கு வேப்பம் பிண்ணாக்கு மற்றும் மண்புழு உரம் போன்ற இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனீட்டாளர்கள் பாரம்பரியக் காய்கறி ரகங்களைப் பயன்படுத்தி இயற்கைவழி காய்கறித் தோட்டங்களை உருவாக்கி பராமரித்து வருகின்றனர். இதைத் தவிர, சமுதாயக் காய்கறித் தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆலங்காடு கிராமத்தில் மழை நீர் சேகரிப்புக்காகப் புதிய பண்ணைக் குட்டை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆலங்காடு பாசன வாய்க்கால் சுத்தம் செய்யப்பட்டு, தண்ணீர் வரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக தடுப்பு அணை ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. பெண்களின் வருவாயை மேம்படுத்தும் முயற்சியாக, கூடை பின்னுதல் மற்றும் தையல் பயிற்சிகள் ஆலங்காடு கிராமப் பெண் பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆலங்காடு கிராமப் பெண்கள் சுய உதவிக் குழு மர நாற்றாங்காலை உருவாக்கி பராமரித்து வருகிறது. அக்டோபர் 10ஆம் தேதியன்று, "மரக்கன்றுகளை நடுதல் மற்றும் பராமரித்தலின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதை தொடர்ந்து, ஆலங்காடு கிராமத்தைச் சுற்றிலும் 233 மரக்கன்றுகள் நடப்பட்டன.

**விவசாயத்தில் எலிக் கட்டுப்பாட்டில் சுற்றுச் சூழலுக்கு உகந்த மேலாண்மை முறைகள்**

இந்தத் திட்டம் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுக்காவில் ஜூலை 2010 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் "எலிகளால் ஏற்படும் சேதாரம் மற்றும்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

அதற்கான மேலாண்மை செலவிடு" மற்றும் "தஞ்சாவூர் கிட்டியைப் பயன்படுத்தி எலிகளைக் கட்டுப்படுத்துதல்" என்ற தலைப்புகளில் விவரச் சேகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இளையான் குடி கிராமத்தில் உள்ள பாம்புகளின் பல்வகைமை குறித்த விவரச் சேகரிப்பு இருளர் இனத்தவரின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டது. அகணி, நெம்மேலி மற்றும் கொண்டல் கிராமங்களில் 63 ஏக்கரில் இருளர்களின் உதவியுடன் எலிக்கட்டுப் பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறையுடன் இணைந்து பொருத்தமான இரைகளைப் பயன்படுத்தி எலிகளைக் கட்டுப்படுத்தும் ஆய்வுகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### இயற்கைவழி வேளாண்மை மூலம் வாழ்வாதாரத்தை உருவாக்குதல்

இந்தத் திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுக்காவில் ஆகஸ்டு 2010 முதல் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் பணிகள் ஆதமங்கலம், பாகசாலை மற்றும் இளையமதுக்கூடம் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ், நெல் சாகுபடிக்கான செலவினங்கள் என்ற தலைப்பில் விவரச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழுள்ள கிராமங்களில் 40 ஏக்கரில் இயற்கைவழி நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களுக்கு வேப்பம் பிண்ணாக்கு, மண்புழு உரம் போன்ற இடுபொருட்கள் வழங்கப்பட்டன. பயனீட்டாளர்களுக்கு பல்வேறு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் குறித்த நான்கு பயிற்சிகள் நடத்தப்பட்டன. திட்டத்தின் பயனீட்டாளர்கள் நவம்பர் 12ஆம் தேதியன்று, நாகப்பட்டினம் மாவட்டம் நபார்டு வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட "தொழில்நுட்பப் பறிமாற்றம் மற்றும் விற்பனை" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொண்டனர். பாகசாலை கிராமத்தில், தீமை செய்யும் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகள் என்ற தலைப்பில் பயிற்சி நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சியை தோட்டக்கலை துணை இயக்குனர் திரு. கணேசன் அவர்கள் நடத்தினார்.

### சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணையில் 87 பாரம்பரிய நெல் ரகங்கள் விதைப் பெருக்கத்திற்காகச் சாகுபடி செய்யப்பட்டன. இந்த நெல் ரகங்களின் குணாதிசயங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. *ஆடுதுறை* - 47, 37 மற்றும் *தூயமல்லி* நெல் ரகங்கள் ராஜ ராஜன் 1000 சாகுபடி முறையில் பயிரிடப்பட்டுள்ளன. மாதிரி மூலிகைத் தோட்டத்தில் 118 புதிய மூலிகைத் தாவரங்கள் நடப்பட்டுள்ளன. புதிதாகக் கட்டப்பட்டுள்ள தொட்டியில் *அசோலா* வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பண்ணையிலுள்ள வேளாண் காட்டில் காணப்படும் தாவரங்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

### காந்தி கிராமத்தில் நடைபெற்ற கூட்டம்

அக்டோபர் 27ஆம் தேதியன்று, ஆ.வே. பால சுப்பிரமணியன் அவர்களும் கே. விஜயலட்சுமி அவர்களும் திண்டுக்கல்லில் உள்ள காந்தி கிராம அறக்கட்டளைக்கு சென்றிருந்தனர். அங்கு, உணவு மற்றும் வேளாண் துறையின் உதவியுடன் காந்தி கிராம அறக்கட்டளையால் செயல்படுத்தப்படும் இயற்கைவழி மூலிகைகள், வாசனைப் பொருட்கள் மற்றும் சாயம் தரும் தாவரங்கள் சாகுபடி திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு "இயற்கைவழி சாகுபடி முறைகள் - பயிர் பாதுகாப்பும், மண்வள மேம்பாடும்" என்ற தலைப்பில் கே. விஜயலட்சுமி அவர்கள் பயிற்சி அளித்தார். இதை தொடர்ந்து நடைபெற்ற காந்தி கிராம அறக் கட்டளையின் ஆதாரக் குழுக் கூட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை நிர்வாகிக்கும் முறைகள் மற்றும் தற்சார்பு வேளாண்மையில் சிஐகேஎஸ்-ன் முயற்சிகள் என்ற தலைப்புகளில் முறையே ஆ.வே. பால சுப்பிரமணியன் அவர்களும் கே. விஜயலட்சுமி அவர்களும் உரையாற்றினர்.

### அகமதாபாத்தில் நடைபெற்ற சர்வதேச மாநாடு

அகமதாபாத்தில் உள்ள சிஇஇ (Centre for Environment Education) நிறுவனம் "தற்சார்பு உலகிற்கான நெறிமுறை கள்" என்ற தலைப்பிலான சர்வதேச மாநாட்டை நவம்பர் 1 - 3ஆம் தேதிகளில் நடத்தியது. இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) சிறு திட்டங்களுக்கான ஆதரவு திட்டத்தின் இந்தியப் பயனீட்டாளர்களுக்கான கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. நமது மையத்தின் சார்பாக ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு "இயற்கைவழி விளைபொருட்களின் விற்பனையில் சிஐகேஎஸ்-ன் தலையீடு" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### ஹீவாஸ் (HIVOS) நிறுவன அலுவலரின் வருகை

நவம்பர் 25 மற்றும் 26ஆம் தேதிகளில், ஹீவாஸ் நிறுவனத்தின் திட்ட அலுவலர் திரு. நரேஷ் பண்டாரு அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார். நவம்பர் 25ஆம் தேதியன்று, சிஐகேஎஸ் சென்னை அலுவலகத்தில் மையத்தின் தொழில்நுட்பப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார். இந்தக் கூட்டத்தில் மையத்தின் ஒட்டுமொத்தப் பணிகள், அணுகுமுறைகள் மற்றும் ஹீவாஸ் நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் குறித்து விவரிக்கப்பட்டது. நவம்பர் 26ஆம் தேதியன்று, சுக்கன்கொல்லையிலுள்ள சிஐகேஎஸ் ஆராய்ச்சிப் பண்ணையைப் பார்வையிட்டார். அங்கு நமது மையத்துடன் இணைந்து பணிபுரியும் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் ராமநாதபுரம் மாவட்ட விவசாயப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரை யாடினார். இதை தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மோகல்வாடி கிராமத்திற்கு சென்று அங்கு நடைமுறையிலுள்ள இயற்கைவழி விதை உற்பத்தி, வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் மற்றும் சமுதாய மண்புழு உரத் தயாரிப்பு கூடம் போன்றவற்றை பார்வையிட்டார். மேலும், மோகல்வாடி இயற்கை விவசாயிகள் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடினார்.

### உலக ஆயுர்வேத மாநாடு

நான்காவது உலக ஆயுர்வேத மாநாடு டிசம்பர் 9ஆம் மற்றும் 13ஆம் தேதிகளில் பெங்களூருவில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக, "இன்னும் பயன்படுத்தப்படாத ஆயுர்வேத மூல வளங்கள்" என்ற தலைப்பில் கூட்டத்தின் இறுதி தொடர் நடைபெற்றது. இதில் "விருட்சாயுர்வேதம் : பாரம்பரிய தாவர அறிவியல்" என்ற தலைப்பில் ஆ.வே. பால சுப்பிரமணியன் அவர்கள் உரையாற்றினார்.

### சட்டக் கல்லூரி மாணவர்களின் குறுகிய காலத் திட்டப் பணி

ஹைதிராபாத்திலுள்ள நல்சார் சட்டக் கல்லூரியின் (NALSAR University of Law) இரண்டாமாண்டு மாணவிகள் இருவர் நமது மையத்தில் குறுகிய காலத் திட்டப் பணியை டிசம்பர் மாதத்தில் மேற்கொண்டனர். இதில், "நுகர்வோராக விவசாயிகள் சந்திக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் மற்றும் விவசாயிகளின் உரிமைகள்" என்ற தலைப்பில் விவரச் சேகரிப்பு, விவசாயிகள் குழுவைச் சந்தித்து உரையாடுதல், விவசாயம் மற்றும் விவசாயிகள் தொடர்புடைய வழக்குகள் குறித்த விவரச் சேகரிப்புப் பணிகளை மேற்கொண்டனர். இந்தக் குறுகிய காலத் திட்டப் பணிக்கான வழிகாட்டுதல் சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர்கள் திருமதி. சுதா ராமலிங்கம் மற்றும் செல்வி பா. பூங்குழலி ஆகியோரால் வழங்கப்பட்டது.

உங்கள் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை info@ciks.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்

## புத்தகங்களும் வீடியோ படங்களும்

### தினசரி நாள் காட்டி - 2011




இயற்கைவழி வேளாண்மையின் பல்வேறு தொழில்நுட்பங்களை விளக்கும் தினசரி நாள் காட்டி தமிழில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் வேளாண் பல்வகைமைப் பாதுகாப்பு, இயற்கைவழி காய்கறித் தோட்டம், இயற்கைவழி வேளாண்மைத் தரச் சான்றிதழின் முக்கியத்துவம், ராஜராஜன் 1000 சாகுபடி முறை மற்றும் பாரம்பரியக் காய்கறி மற்றும் நெல் ரகங்கள் குறித்த விவரங்கள் சுருக்கமாகத் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

### நெல் பல்வகைமை - வாழ்க்கையின் ஊட்டம் (மேசை நாள் காட்டி - 2011)




நெல் பல்வகைமையை விளக்கும் இந்த ஆங்கில நாள் காட்டியில் நெல் பல்வகைமை குறித்த அடிப்படை தகவல்கள், முக்கியத்துவங்கள் மற்றும் குறிப்பிட்ட சில நெல் ரகங்களின் குணாதிசயங்கள் மற்றும் சிறப்பு பண்புகள் குறித்த விவரங்கள் கண்கவர் புகைபடங்களுடன் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

பிரதிகளைப் பெற விரும்புவோர்
இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தைக் கீழே
கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

## வருகையாளர் பதிவேடு

- *அக்டோபர் 14ஆம் தேதியன்று, திருச்சியிலுள்ள லீட் (LEAD) நிறுவனத்துடன் இணைந்து பணிபுரியும் 19 விவசாயிகள் மற்றும் பிரதிநிதிகள் அடங்கிய குழு சுக்கன்கொல்லையிலுள்ள ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *நவம்பர் 8ஆம் தேதியன்று, ஆயுர்வேத வைத்தியர் டாக்டர் ராஜஸ்ரீ பார்த்தசாரதி அவர்களும், திரு. பார்த்தசாரதி அவர்களும், இயற்கைவழி பயிர் சாகுபடியில் விருட்சாயுர்வேதத்தின் உபயோகம் குறித்து கலந்துரையாடுவதற்காக மையத்தின் சென்னை அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.*
- *நவம்பர் 14 ஆம் தேதியன்று, விகடன் பத்திரிக்கை - சுட்டி விகடன் இதழின் துணை - பதிப்பாசிரியர் திரு. கணேசன் மற்றும் எட்டு சிறுவர்கள் அடங்கிய குழு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் மற்றும் பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாப்பு குறிந்து அறிந்து கொள்வதற்காக சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *நவம்பர் 15 மற்றும் 16ஆம் தேதிகளில், பெங்களூருவிலுள்ள எஃப்ஆர்.எல். எச்டி. (FRLHT) நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி கீதா சுரேஷ் அவர்கள் மையத்தின் சென்னை அலுவலகத்திற்கு வந்திருந்தார்.*
- *நவம்பர் 18ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள கேர் இண்டியா (CARE India) நிறுவனத்தின் செல்வி சந்திரிகா மற்றும் திரு. சசிகுமார் ஆகியோர் மையத்தின் சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.*
- *நவம்பர் 19ஆம் தேதியன்று, நாகப்பட்டினம் நபார்ட் (NABARD) வங்கியின் துணை மேலாளர் திரு. வேணுகோபால் அவர்கள் மையத்தின் சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தார்.*
- *நவம்பர் 23ஆம் தேதியன்று, மும்பையிலுள்ள ஸ்வயம் சிக்ஷாக் பிரயோக் (Swayam Sikshak Prayog) அமைப்பின் இயக்குனர் திருமதி. பிரேமா கோபாலன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *டிசம்பர் 17ஆம் தேதியன்று, என்.பி.எம். (Non-Pesticidal Management) அமைப்பின் திரு. நந்தகுமார் அவர்களும், சேஃப் ஆர்வஸ்ட் (Safe Harvest) அமைப்பின் திரு. அமீர் வால்டியா அவர்களும் மையத்தின் சென்னை அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.*
- *டிசம்பர் 18ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவிகள் நமது சுக்கன்கொல்லை ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *டிசம்பர் 29ஆம் தேதியன்று, பெங்களூருவிலுள்ள, ஐ.எம்.ஓ. (IMO) நிறுவனத்திலிருந்து திரு. நவீன் பட்டா அவர்கள் நமது ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தார்.*

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862

மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**